**ஜூன் – 24**

**"நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும்." - ரோம 8 : 17.**

நம்முடைய எஜமானாகிய யேசுவோடு பிதா வைத்திருந்த விவகாரங்களில் விளங்கின அவருடைய சித்தத்தின் உதவிகொண்டு நமக்காகவுள்ள பிதாவின் ஏற்பாடுகளைக் கற்றறிந்தோமானால், நமக்கிருக்கிற எல்லா வேதனை, சோதனை, பாடுகள் இவைகளிலிருந்து தேவன் நம்மை விலக்கிவைத்து, சுகஜீவியத்தின் புஷ்ப்பப்படுக்கையில் நம்மை வைத்து வெற்றிசூட்டி, நம்மை மகிமைக்கு எடுத்துச்செல்ல வேண்டும் என்பது, அவருடைய சித்தம் அல்ல, என்று உடனே நாம் முடிவு செய்யலாம். முழு உலகத்தின் பாவத்திற்காக நீதியை திருப்தி பண்ணும் ஒரு பலியாக மட்டுமல்லாமல், கிறிஸ்துவின் எல்லா சீஷர்களுக்கும் ஒரு மாதிரியாகவும் கூட தேவன் வைத்திருக்கிற அவருடைய அடிச்சுவடுகளில் நாம் பின்பற்ற வேண்டுமானால், நம்முடைய போக்கு, உண்ம்மையாகவே மிகவும் எதிரானதாக இருக்க வேண்டும். மகிமை அடைய இதுதான் வழி என்று, அவருடைய ஞானம் நமக்காக நியமித்திருக்கிற வருத்தத்திலிருந்தும் உபத்திரவத்திலிருந்தும் நாம் விடுவிக்கப்பட கேட்கவும் கூடாது. எதிர்பார்க்கவும் கூடாது என்று தேவனுடைய ஏற்பாட்டிலும், அவருடைய சித்தத்திலும் நாம் கற்றுக் கொண்டவைகள் உடனடியாக நமக்குப் போதிக்கும். **- Z '96, 151 (R 1997).**

நாம் தேவனுடைய ஆவியைப் பெற்றிருக்கிற அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். ஆகையால் நாம் ஒரு மகா மேன்மையான சுதந்திரத்தை எதிர்பார்க்கலாம். பிரதான சுதந்திரரான கிறிஸ்துவுக்கடியில் நாம் பெறப்போகிற நம்முடைய சுதந்திரம் நித்திய காலமாக பிரிக்கப்படாததாயிருக்கும். அப்படியானால், இந்த சுதந்திரத்திற்குள் பிரவேசிக்க யார்தான் தகுதியானவர்கள் என்று எண்ணப்படுவார்கள்? யாருடைய பயபக்தி பிதாவுக்கும், குமாரனுக்கும் சத்தியத்திற்கும் (சகோதரருக்காகவும் உலகமக்களுக்காகவும்) தேவ ஆவியில் கிறிஸ்துவோடு பாடு அனுபவிக்கத் தூண்டுகிறதோ, அவர்கள் மாத்திரமே இந்தப் பெரிய சுதந்திரத்திற்குத் தகுதியுள்ளவர்களென்று எண்ணப்படுவார்கள். **-P '26, 76.**

**ஒத்து வாக்கியங்கள்** :-

எபி 2:10; 2தீமோ 2:10-13; கொலோ 3:4; 1பேது 5:10; 2தெச 2:14; ரோம 8:18; 9:23; 2கொரி 4:16-18; ஏசா 60:14-22; 1கொரி 15:41-57; பிலி 3:21.

**கோபுர வாசிப்பு : Z '12, 61 (R 4973)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் கிறிஸ்துவோடு கூட துன்பங்களின் மத்தியில் இராஜ்யத்திற்காக நம்பிக்கையாயிருந்தேனா? அது என் ஆவியை எவ்வாறு பாதித்தது?